**சுருக்கம்**

பேருந்து நிலையம் - விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி - நில அளவை எண். 33/4 மற்றும் 36/5 உள்ள 6 ஏக்கர் நிலத்தில் ரூ. 675.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க - நிர்வாக அனுமதி வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 4) துறை**

**அரசாணை (நிலை) எண். 46** | **நாள்: 05.03.2010**

**<u>படிக்கப்பட்டது:-</u>**

1. அரசு ஆணை (நிலை) எண். 101 வருவாய்த்துறை, நாள் 5.3.2001.
2. அரசு ஆணை (நிலை) எண். 191 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.10.09.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண். 51672/ தி3/ 09 -2 நாள் : 27.1.2010 மற்றும் 25.2.2010.

\- - - - - -

ஆணை:

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திண்டிவனம் ஏரிப்பகுதியில் உள்ள நில அளவை எண்.33/4-ல் உள்ள ஒரு ஏக்கர் மற்றும் நில அளவை எண். 36/5 –ல் உள்ள திண்டிவனம் ஏரிப்பகுதியில் உள்ள ஐந்து ஏக்கர் நிலம் மொத்தம் ஆறு ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் நவீன புதிய பேருந்து நிலையம் கட்ட மேலே முதலாவதாக படிக்கப்பட்ட ஆணையினை உறுதி செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வகையிலும் பொருத்தமான திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்/ திண்டிவனம் நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேற்படி அரசாணையை எதிர்த்து தொடரப்பட்ட நீதிப்பேராணை பல்வகை மனு எண். 2/09-ல் 12/11/2009 அன்று தற்போதைய நிலையினையே தொடர இடைக்காலத் தடை வழங்கப்பட்டது. அவ்வழக்கு மீண்டும் 21.1.2010 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதில் மேற்படி தடையாணையினை மாற்றம் செய்து, புதிய பேருந்து நிலையம் கட்டுவது தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகள் மட்டும் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் திண்டிவனம் ஏரிப்பகுதியில் ரூ. 675.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க

விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிதி ஆதாரம் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

(ரூபாய் இலட்சங்களில்)

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி நிறுவனம் மூலம் கடன் | ரூ. 405.00 |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்படும் கடைகளுக்கு முன் ஏல வைப்புநிதி மூலம் பெறப்படும் தொகை | ரூ. 36.80 |
| 3 | நகராட்சி பொது நிதி | ரூ. 33.20 |
| 4 | மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (2009 – 10 மற்றும் 2010 – 11 ஆம் ஆண்டு தலா ரூ. 100.00 இலட்சம் வீதம்) | ரூ. 200.00 |
| | மொத்தம் | ரூ. 675.00 |

மேலும், திண்டிவனம் ஏரிப்பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க தோராய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 820.00 இலட்சத்திற்கு திண்டிவனம் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 171 நாள் 22.10.2009 ல் ஒப்புதல் வழங்கியுள்ளது என்றும் எனவே, திண்டிவனம் ஏரிப்பகுதியிலுள்ள 6 ஏக்கர் நிலப்பரப்பில் மேலே குறிப்பிட்டுள்ளவாறான நிதி ஆதாரத்துடன் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்குமாறு திண்டிவனம் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்து அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை, ஏற்று திண்டிவனம் நகராட்சி ஏரிப்பகுதியில் நில அளவை எண். 33/4 மற்றும் 36/5 ல் உள்ள 6 ஏக்கர் நிலத்தில் மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு திண்டிவனம் நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலர்**

<u>பெறுநர்</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம்.
நகராட்சி ஆணையர், திண்டிவனம் நகராட்சி.

**<u>நகல்:-</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி –II/அந II) துறை. சென்னை – 9.

**-/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-**

**பிரிவு அலுவலர்**